ஓமலூர் வட்டார அரிசன நலத்துறை அலுவலகம்.

*வினா எண் 871.—திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டார அரிசன நலத்துறை அலுவலகம் சேலத்தில் செயல்பட்டு வருவதன் காரணம் யாது?

(ஆ) எப்போது அந்த அலுவலகம் ஓமலூருக்கு மாற்றப் படும்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஓமலூரில் தக்கதொரு கட்டிட இடவசதி கிடைக்காத காரணத்தால் ஓமலூர் ஆதி திராவிடர் நல அலுவலகம் ஓமலூருக்கு மாற்றப்படாமல் சேலத்தில் இயங்கி வந்தது.

(ஆ) ஓமலூர் ஆதி திராவிடர் நல அலுவலகம், ஓமலூருக்கு மாற்றப்பட்டு 16—1—1981-ந் தேதியிலிருந்து ஓமலூர் தாலுக்கா அலுவலகத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, பஸ் தொழிலாளர்களுக்கும் காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் ஏற்பட்ட மோதலிலே, விருத்தாசலத்திலே துப்பாக்கிச்சூடு நடைபெற்று, அங்கே 144.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி நிறைய உறுப்பினர்கள் காலை 8 மணிக்கே அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர், ஐயா அவர்கள், இப்பொழுதுதான் வந்திருக்கிறார்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : கார்ப்பரேஷன் தொழிலாளர்கள் ஸ்டிரைக் பற்றிஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன் ஏற்கனவே பேசியாகிவிட்டது என்று மறுத்து விட்டார்கள்.

1981 ஏப்ரல் 24] [திரு. ப. பொன்னுரங்கம்]

பட்ஜெட் பற்றிக்கூட வருடாவருடம் பேசுகிறோம், டிமாண்ட்ஸ் மீதும் வருடாவருடம் பேசுகிறோம். அதனாலே, அடுத்த வருடம் எடுத்துக் கொள்ளக் கூடாதா? பாவம், ஆதி ஆந்திரர் சமுதாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றிய டிமாண்ட் முடிந்து போயிற்று. அதிலே பேசியிருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். (குறுக்கீடு) அதிலே பேசவில்லையென்றால், வேறு எதாவது விதியிலே எடுத்துக் கொள்ள முடியுமா என்று பார்க்கிறேன்.

3. ஒத்தி வைப்புத் தீர்மானம்

மைய சட்ட அமைச்சரிடமிருந்து நீதிபதிகள் மாற்றம் குறித்து வந்துள்ள கடிதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ரா. உமாநாத், கு. ரமணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், இரா. கருப்பையா ஆகியோர் அடிஷனல் உயர்நீதி மன்ற நீதிபதிகளிடம் மாநிலம்விட்டு மாநிலம் மாற்றினால் எந்த மூன்று இடங்களுக்கு என்று விருப்பம் கேட்டும் புதிதாக நியமனம் செய்ய பரிசீலனையில் இருக்கும் நீதிபதிகளிடமும் மேற்சொன்ன இடமாற்றப் பெயர்களை கேட்டும் சேகரித்து அனுப்ப வேண்டும் என்று தமிழக அரசு, மைய சட்ட அமைச்சரால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதால் நமது மாநில அரசு அதிகாரம் பாதிக்கப்படும் ஐயப்பாட்டினால், மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிய என் அனுமதி, கேட்டு, அறிவிப்புக் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: அவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் நமது முதலமைச்சருக்கு மைய அரசாங்கத்தின் சட்ட அமைச்சர் இடமிருந்து ஒரு கடிதம் வந்துள்ளது. அது உயர் நீதிமன்ற நீதிபதிகள் மாற்றல் சம்பந்தமாக இருந்தாலும் அது நீதித் துறையில் மாநில அரசின் அதிகாரத்தைப் பாதிக்கக் கூடியதாக இருக்கின்றது. இது உயர்நீதி மன்றத்தில் நமது பிரஜைகளுக்குக் கிடைக்கவேண்டிய நீதியைப் பாதிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. அக்கடிதப்படி நமது முதலமைச்சர் அவர்கள் இரண்டு பணிகளைச் செய்யவேண்டும் என்று பணிக்கப்பட்டிருக்கிறார். அதில் ஒன்று, புதிய நீதிபதிகளாக நியமனம் செய்யப்படுவதற்கான பெயர்கள் மாநில அரசின் பரிசீலனையில் இருந்தால், அவர்களிடம் மாநிலம் விட்டு மாநிலம் மாற்றப்படுவதற்கு அவர்கள் எழுத்து மூலமாக சம்மதத்தை பெற்றுக் கொண்டு, அதை மைய அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டும்.